ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1945/7 - 2015 දෙසැම්බර් මස 14 වැනි සඳුදා - 2015.12.14

*1945/7 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 1/2012* (II)

### *1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்*

*இந்து சமுத்திர ரியுனா ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேணிக்காத்தலை மற்றும் வழிமுறைகளை முகாமைத்துவம் செய்யும் நோக்கத்திற்காக 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ந) என்னும் பிரிவின் கீழ் கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த அமரவீர,*
*கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள்*
*அபிவிருத்தி அமைச்சர்.*

*கொழும்பு,*
*2015, நவெம்பர் 30.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2015 ஆம் ஆண்டின் .................... ஆம் இலக்க, வெளிநாட்டுக் கொடி ஏற்றப்பட்ட மீன்பிடி படகுகளில் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற இலங்கைப் பிரசைகளுக்கான ஆகக்குறைந்த நியமங்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* இலங்கை ஆழ்கடலின் பிரத்தியேக பொருளாதார வலயத்தினுள் அல்லது ஏனைய கரையோர அரசுகளின் பிரத்தியேக பொருளாதார வலயத்தினுள் தொழிற்படுகின்றதான வெளிநாட்டுக் கொடியேற்றப்பட்ட மீன்பிடித்தல் கலம் ஒன்றில் சேவையாற்றுவதற்கு விரும்புகின்றவரான எவரேனும், இலங்கைப் பிரசையானவர் பின்வருபவராகவிருத்தல் வேண்டும் :-

(i) 18 வயதிற்கு குறைவானவராகவிருத்தலாகாது ;

(ii) ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அடையாள அட்டைக்கு மேலதிகமாக அவருடைய அடையாளத்தினை எண்பிப்பதற்கு கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையொன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்;

(iii) அந்தந்த அரசினால் பேணப்படும் கலங்களைக் கண்காணிக்கின்ற முறைமைகளின் கீழ் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளவரான ஆளொருவரினால் தொழிலுக்கமர்த்தப்பட்டவராகவிருத்தலாகாது.

3. ஆட்சேர்ப்பு முகவரெதுவும் அல்லது நிறுவகமெதுவும், அந்தந்த அரசின் படகுகளைக் கண்காணிக்கும் முறைமையின் கீழ் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ளாரெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளவரான தொழில்தருநரின் சார்பில் எவரேனும் இலங்கைப் பிரசையினை தொழிலுக்கமர்த்துதலாகாது.

4. (i) வெளிநாட்டு மீன்பிடித்தல் படகொன்றினால் தொழிலுக்கமர்த்தப்படுவதற்கு விரும்புகின்றவரான எவரேனுமாள், பொருளளவில் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் அனுமதிப்பத்திரமொன்றிற்காக விண்ணப்பமொன்றினைச் செய்தல் வேண்டும்.

(ii) இவ்வொழுங்குவிதியின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் பொருளளவில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

5. பணிப்பாளர் தலைமையதிபதி, ஒழுங்குவிதி 2 இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதன் மீது மட்டுமே ஒரு அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் வேண்டும்.

6. ஆளெவரும் அந்நோக்கத்திற்காக கடற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின் கீழன்றி ஏதேனும் வெளிநாட்டுக் கொடியேற்றப்பட்ட மீன்பிடிப் படகில் சேவையாற்றுதலாகாது.

## அட்டவணை I

[ ஒழுங்குவிதி *4* (i)]

கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களம்,
மாளிகாவத்தை, கொழும்பு 10, இலங்கை

**வெளிநாட்டு மீன்பிடித்தல் படகொன்றில் சேவையாற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றிற்கான விண்ணப்பம்**

<table>
<tr><td>முழுப்பெயர்</td><td colspan="4"></td><td colspan="3">நிரந்தர முகவரி</td></tr>
<tr><td>வதிவிட மாவட்டம்</td><td colspan="4"></td><td colspan="3"></td></tr>
<tr><td>தே. அ. அ. இல.</td><td colspan="4"></td><td colspan="3"></td></tr>
<tr><td>கடவுச்சீட்டு இல.<br>(ஏதேனுமிருப்பின்)</td><td colspan="4"></td><td colspan="3"></td></tr>
<tr><td rowspan="2">பிறந்த திகதி</td><td>ஆண்டு</td><td>மாதம்</td><td>திகதி</td><td>விண்ணப்பிக்கும் திகதியிலுள்ளவாறு வயது</td><td>ஆண்டு</td><td>மாதம்</td><td>திகதி</td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>தொலைபேசி இல.</td><td colspan="3"></td><td></td><td colspan="3">DFAR ஆல் வழங்கப்பட்ட மீன்பிடித்தல் அடையாள அட்டை இல.</td></tr>
<tr><td rowspan="3">தொழிலின் தற்போதைய தன்மை</td><td colspan="3">கப்பற் தலைவர்/கப்பல் பொறுப்பாளர்</td><td colspan="4" rowspan="3">தற்போதைய தொழில் தருநரின் தொடர்புகொள்ள வேண்டிய விபரங்கள்<br><br>பெயர் மற்றும் முகவரி :<br><br>தொலைபேசி இல.:</td></tr>
<tr><td colspan="3">கப்பற்றொகுதியின் உறுப்பினர்</td></tr>
<tr><td colspan="3">மீன் பதப்படுத்துநர்/ ஏற்றுமதியாளர்</td></tr>
<tr><td colspan="8">எம் முகவர் /நிறுவகம் தொழிலை வசதிப்படுத்துகின்றதோ அம் முகவர்/நிறுவகத்தின்<br><br>பெயர் : முகவரி : தொலைபேசி இல. :</td></tr>
<tr><td colspan="3" rowspan="3">விண்ணப்பிக்கும் தொழிலின் தகைமையாகவுள்ள<br><br>வேலை அனுபவம்</td><td colspan="2">வெளிநாடு</td><td rowspan="3"></td><td colspan="2" rowspan="3">வேலைக் காலப்பகுதி</td></tr>
<tr><td colspan="2">வெளிநாடு/வெளிநாடுகளின் பெயர்/பெயர்கள்</td></tr>
<tr><td colspan="2">இலங்கை</td></tr>
<tr><td colspan="8">தேசிய அல்லது ஏனைய தேசிய, கடற்றொழில் சட்டங்களின் மீறுகைகளுக்கான குற்றச்சாட்டுக்களின் எவையேனும் பதிவேடுகள்.</td></tr>
</table>

1. விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள மேலேயுள்ள தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

2. நான் ஏதேனும் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தொழிலில் ஈடுபடமாட்டேன் என இத்தால் உடன்பட்டுக்கொள்கின்றேன் என்பதுடன் உடன்படிக்கையினை உறுதிப்படுத்துவதற்கான சத்தியக்கடதாசியொன்று இதனுடன் இணைக்கப்பட்டுமுள்ளது.

3. இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையற்றவை என வெளிப்படுத்தப்படின், இவ்விபரங்களின் அடிப்படையின் மீது வழங்கப்பட்ட உரிமமானது இல்லாதாக்கப்படுவதற்கு ஆளாகுதல் வேண்டுமென்பதற்கு இத்தால் நான் உடன்பட்டுக்கொள்கின்றேன்.

...............................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :..................................

*அலுவலகப் பாவனைக்கு மட்டும் :*

(அ) வெளிநாட்டு மீன்பிடித்தல் படகில் சேவையாற்றுவதற்கு அளிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்படுகின்றது/பரிந்துரை செய்யப்படவில்லை;

.......................................................................................................................................................

| ................................. | ..................................... | .............................. | .................................... |
|---|---|---|---|
| கையொப்பம் | கடற்றொழில் அலுவலரின் பெயர் | கடற்றொழில் பரிசோதகர் பிரிவு | திகதி |

(ஆ) வெளிநாட்டு மீன்பிடித்தல் படகொன்றில் சேவையாற்றுவதற்கு அளிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்படுகின்றது/பரிந்துரை செய்யப்படவில்லை.

.......................................................................................................................................................

| ............................... | ..................................................... | .............................. | .......................... |
|---|---|---|---|
| கையொப்பம் | உதவிப் பணிப்பாளரின் பெயர் | மாவட்டம் | திகதி |

(இ) பணிப்பாளர் தலைமையதிபதியின் /உரிமமளிக்கின்ற அலுவலரின் கட்டளை.

வெளிநாட்டு மீன்பிடித்தல் படகொன்றில் சேவையாற்றுவதற்கு அளிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்படுகின்றது/வழங்கப்படவில்லை.

பெயர் :.........................................................

பதவி :..........................................................

இலச்சினை :..............................................

## அட்டவணை II

[ ஒழுங்குவிதி 4 (ii)]

கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களம்,
மாளிகாவத்தை, கொழும்பு 10, இலங்கை

### வெளிநாட்டுக் கொடியேற்றப்பட்ட மீன்பிடித்தல் படகில் சேவையாற்றுவதற்கான அனுமதிப்பத்திரம்

இலங்கை குடிவரவு, குடியகல்வு சட்டங்களுக்கமைய மற்றும் இலங்கையில் கையொப்பம் இடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச சமவாயங்கள், பொருத்தனைகள் மற்றும் தீர்மானங்களுக்கமைய...................................... என்னும் இடத்தினைச் சேர்ந்த............................................. என்னும் மீன்பிடித்தல் கம்பெனிக்குச் சொந்தமான வெளிநாட்டுக் கொடியேற்றப்பட்ட மீன்பிடித்தல் படகொன்றில் கப்பற் தலைவர்/கப்பற் பொறுப்பாளர்/கப்பல் தொகுதி உறுப்பினர் /சிற்றூழியர் என்னும் தகைமையில் சேவையாற்றுவதற்கு.................. இலக்க தேசிய அடையாள அட்டை மற்றும்................ இலக்க கடவுச் சீட்டினை (ஏதேனும் இருப்பின்) வைத்திருக்கின்ற ........................... என்னும் இடத்தினைச் சேர்ந்த............. என்பவருக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது.

.............................................
பணிப்பாளர் தலைமையதிபதி
கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களம்.

*1- 37*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.